தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

(நான்காவது பட்டியல்)

ஆதி திராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அறிவிப்பு !

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. ஆதிதிராவிடர்நலக்குழு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

கோவை வடக்கு மாவட்டம்

தலைவர் : பி.ஆர்.வேலுசாமி 4/22. பரமேஸ்வரன் பாளையம், தேவராயபுரம் அஞ்சல், கோவை - 641109.

துணைத் தலைவர்: சி.பன்னீர்செல்வம் 1/210, கண்ணம்பாளையம், காரமடை, கோவை.

அமைப்பாளர்: **ர.சிவசாமி** 6/44, காந்தி காலனி, தென்னம நல்லூர், கோவை - 109.

துணை அமைப்பாளர்கள் : த.ராஜகோபால் 21/31, குட்டேயூர் மாதேஸ்வரன்புதூர், மேட்டுப்பாளையம், கோவை. கோ.செல்வகுமார் 186, சாத்திரி வீதி, காளப்பட்டி, கோவை. ஆ.ராஜேஷ் அர்ஜுனர் காலனி, நரசிம்மநாயக்கன்பாளையம், கோவை. சொ.முரளிதரன் 6, தந்தை பெரியார் நகர், சரவணம் பட்டி, கோவை. சம்பத் கண்ணன் 51, லெனின் வீதி, விளாங்குறிச்சி, கோவை 641035. க.ஆறுசாமி 3/124, பெரியார் நகர், நல்லி செட்டிபாளையம் அஞ்சல், அன்னூர், கோவை.

கோவை தெற்கு மாவட்டம்

தலைவர் வீ.செந்தில்குமார் 5/14, சீராம்பாளையம், போடிபாளையம் அஞ்சல், மதுக்கரை, கோவை - 641105.

துணைத் தலைவர் மாணிக்கவேல் நந்தனார் காலனி, பல்லடம் சாலை, பொள்ளாச்சி - 642005.

அமைப்பாளர் : **கீ.ஞானசேகரன்** 5/9, இம்மிடிபாளையம், சொலவம் பாளையம், கிணத்துக்கடவு - 642109.

துணை அமைப்பாளர்கள் : கே.பி.சண்முகம் 6/138, கொள்ளுப்பாளையம், கணியூர்அஞ்சல், சூலூர் 641659. ஆர்.ரவிசந்திரன் 9/945, அண்ணா நகர், வால்பாறை 642127. ஆர்.மணி மோகன் 7/33, பெரியார் நகர், செலக்கரிசல், சூலூர் 641658. டி.பஞ்சலிங்கம் 86, அம்பேத்கர் வீதி, விடுகபாளையம், பொள்ளாச்சி 642001. ந.சிவசங்கர் 5/101, ஆலம்பாளையம் எரிப்பட்டிஅஞ்சல், பொள்ளாச்சி 642217. ர.அருள்ராஜ் 3/189, ஆதிதிராவிடர் காலனி, பிச்சனூர், கோவை 641661.

ஆவடி மாநகரம்

தலைவர்: சி.முல்லை ஜெகன் 73, பள்ளி விநாயகர் கோவில் தெரு, திருமுல்லைவாயல், சென்னை 62.

துணைத் தலைவர்: ஜி.ராஜ்குமார் திருவள்ளூர் தெரு, திருமுல்லைவாயல் காலனி, சென்னை 62.

அமைப்பாளர்: **தண்டுரை கோபி** தண்டுரை, பட்டாபிராம், சென்னை.

துணை அமைப்பாளர்கள்: செல்வம் சி.டி.எச் சாலை, ஆவடி, சென்னை 54. வினோத் 16, பஜா நகர், 3வது தெரு, என்.எம் சாலை, சென்னை 54. க.சுரேஷ்குமார் 25, மாரியம்மன் கோவில் தெரு, சேக்காடு, சென்னை 71. ரஞ்சித் குமார் 4, நவ ஜீவன் நகர், பட்டாபிராம், சென்னை. தியாகராஜன் 10, மாசி லாமணி தெரு, செந்தமிழ் நகர், அண்ணாநகர், பட்டாபிராம், சென்னை 72. ரா.முரளி 58, திருவள்ளுவர் தெரு, காமராஜபுரம், பட்டாபிராம், சென்னை - 72. சி.தீர்த்தநாதன் 24/1, ஐ.ஏ.எஃப் குடியிருப்பு, முத்தாபுதுப்பேட்டை, சென்னை - 55. சி.வெங்கடேசன் 13, டாக்டர்அம்பேத்கர்தெரு, ராமலிங்கபுரம், காமராஜர்நகர், ஆவடி, சென்னை - 600071.

கரூர் மாவட்டம்

தலைவர் : பி.மேகநாதன் 52/1, ஆதிதிராவிடர்தெரு, சணப் பிரட்டிஅஞ்சல், கிருஷ்ணராயபுரம்தாலுக்கா, கரூர்மாவட்டம் 639004.

துணைத் தலைவர் : ஜெ.லோகநாதன் 5/96, கே. பேட்டை&அஞ்சல், குளித்தலைதாலுக்கா, கரூர்மாவட்டம்.

அமைப்பாளர் : **ம.அம்பிகாபதி** 3/52, பொய்கைப்புத்தூர், கிருஷ்ணராயபுரம்அஞ்சல், கரூர்மாவட்டம் 639102.

துணை அமைப்பாளர்கள் : பி.வெற்றிவேல் 143, பழையத பால்நிலையம்தெரு, மலைக்கோவில்அஞ்சல், அரவக்குறிச்சி தாலுக்கா, கரூர்மாவட்டம். பி.சக்திவேல் 8/14, பிச்சக் கவுண்டனூர், கே.பிச்சம்பட்டிஅஞ்சல், கரூர்தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639118. பி.மோகன்குமார் 45/12, தாந்தோணி மலை 4வதுகிராஸ், தாந்தோணிமலைஅஞ்சல், கரூர்தாலுக்கா, கரூர்மாவட்டம் 639005. பி.ராமதாஸ் 7/48, நடுத்தெரு வடக்கு, நெரூர்வடபாகம், பழையூர்அஞ்சல், மண்மங்கலாம் தாலுக்கா, கரூர்மாவட்டம் 639004. ரா.இளையராஜா. 38நேதாஜிநகர், சின்னகுளத்துபாளையம், வெங்கமேடு அஞ்சல், கரூர்மாவட்டம் 639001.

புதுச்சேரி மாநிலம்

தலைவர்: மு.பழனிசாமி 23, மாரியப்பன்கோவில்தெரு, உத்திரவாகினிபேட், வில்லியனூர், புதுச்சேரி 605110.

துணைத் தலைவர் : அ.கதிரவன் 22, மாதாகோவில்தெரு, ஒதியம்பட்டு, வில்லியனூர், புதுச்சேரி - 605110.

அமைப்பாளர்: **சி.ஆறுமுகம்** 20, பாரதிவீதி, உத்திரவாகினி பேட், வில்லியனூர், புதுச்சேரி 605110.

துணை அமைப்பாளர்கள் : து.அன்பழகன் 12, சங்கோதியம் மன்கோவில்தெரு, உருளையன்பேட்டை, புதுச்சேரி 11. அ. சக்திவேல், 23, புதுநகர், அபிஷேகப்பாக்கம், புதுச்சேரி605 007. சி.திருநாவுக்கரசு 71சி, பெரியபேட், இராம்ஜீநகர், மடு கரை, புதுச்சேரி - 605105. அ.காளி பாண்டிமெயின்சாலை, சுல்தான்பேட்டை, வில்லியனூர், புதுச்சேரி 605110. சு.கலிய மூர்த்தி 16, முதல்தெரு, புதுநகர், ஊசுடுபேட், வில்லியனூர், புதுச்சேரி 605110. க.தெய்வேந்திரன் 3மாரியம்மன்கோவில் தெரு, பணையடிக்குப்பம், நெட்டாப்பாக்கம், புதுச்சேரி 605106. ந.ஆறுமுகம் 28, முதல்தெரு, அரியூர்பேட், புதுச்சேரி. ஏ.கம லக்கண்ணன் 38, அம்பேத்கர்தெரு, காட்டேரிக்குப்பம், புதுச் சேரி 605502. சக்திவேல் 32, புதுநகர், குப்பம்பேட், கொம்பாக் கம், வில்லியனூர், புதுச்சேரி 605110. பா.அய்யனார் 58, மாரியம்மன்கோவில்தெரு, பிள்ளையார்குப்பம், ஊசுடு, புதுச் சேரி 605502.

தஞ்சை மாநகரம்

அமைப்பாளர் : **ஆர்.மணிகண்டன்** 58, செக்கடித்தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர். துணைஅமைப்பாளர்கள் ஜி.பிரதாப் 125, மேல்லயன், எ.ஒய்.எ. நாடார்சாலை, வடக்குசாலை, தஞ்சை. வி.தமிழ்வேந்தன் 47எ, பொந்திரிபாளையம், வடக்கு வாசல், தஞ்சாவூர். வே.குணசேகரன் 97, பொந்திரிபாளையம், வடக்குவாசல், தஞ்சாவூர். ப.சுரேஷ்காந்தி 10633, இராவுத்தாபா ளையம், கீழாவாசல், தஞ்சாவூர். எஸ்.சுரேஷ் 95, ருக்குமணியம்மாள்மடம், பாலோபநந்தவனம், தஞ்சாவூர்.

தஞ்சை மத்திய மாவட்டம்

தலைவர்: கே. ரவிச்சந்திரன் பாலையாப்பட்டி, செங்கிப்பட்டி, பூதலூர், தஞ்சைமாவட்டம். துணைத்தலைவர் அ. பழனியப் பன் மறியல், என்.கே. ரோடு, தஞ்சாவூர்.

அமைப்பாளர் : **மு. சிந்தனைசெல்வம்** 97, எ.எஸ். அன்பழ கன்நகர்விரிவாக்கம் வெண்ணாற்றங்கரை, தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் : எம். மதியழகன் பரிசுத்தம்நகர், களிமேடு, தஞ்சாவூர். சு. கல்யாணசுந்தரம் மேலையூர், திரு மங்கலக்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர். இரா. ஜோதிவேல், நண்டம்பட்டி, புதுக்குடி, பூதலூர், தஞ்சாவூர். தாடிசெல்வம் (எ) விஜயராகவன் ஜெபமாலைபுரம், மேலவெளி, தஞ்சாவூர். மா. குளஞ்சியப்பா, நடுமலன், எ.ஒய்.எ. நாடார்ரோடு, வடக்குவா சல், தஞ்சாவூர்.

நீலகிரி மாவட்டம்

தலைவர் : கே.சின்னான் காந்திபுரம், தொட்டகம்பை, மீஞ்சூர், நீலகிரிமாவட்டம்.

துணைத் தலைவர் : எல்.செல்வன் தொட்டன்னி, கக்குச்சி, உதகை, நீலகிரிமாவட்டம்.

அமைப்பாளர் : **இ.எம்.ராம்குமார்** பொம்மன்மேல்பகுதி, கீழ்கோத்தகிரி, நீலகிரிமாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் : இரா.மூர்த்தி கே.கேநகர், உப் பட்டி, பந்தலூர், நீலகிரிமாவட்டம். ஆர்.மகாவிஷ்ணு ஆதிதிரா விடர்காலனி, சேரம்பாடி, நீலகிரிமாவட்டம். ஜி.சசிகுமார் பழை யஉதகை, உதகை, நீலகிரிமாவட்டம். மா.மகாலிங்கம் 16/231, மருதுஇல்லம், கைக்காட்டி, உதகை, நீலகிரிமாவட்டம். எஸ்.சந்திரமோகன் காந்திநகர், சுங்கம் சேரம்பாடி, பந்தலூர், நீலகிரிமாவட்டம். எஸ்.வெங்கடேஷ் புட்சர்தெரு, உதகை, நீல கிரிமாவட்டம். மு. ஜெயசீலன் 4/8.எ, வாழவயல், தேவாலா அஞ்சல் நீலகிரிமாவட்டம். வி.ரகுபதி பெப்ரூக்அவுஸ், நொண் டிமேடு, உதகை, நீலகிரிமாவட்டம். ஆர்.தம்பு (எ) ஆனந்தகுமார் அண்ணாநகர், கொடநாடு, நீலகிரிமாவட்டம்.

"அண்ணாஅறிவாலயம்"
சென்னை 18.

ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,
செயலாளர்,
தி.மு.க.ஆதிதிராவிடர்நலக்குழு

சின்னாளபட்டி பேரூராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரியும் அருந்ததியர் சமுதாய மக்கள் குடியிருக்கும் மக்களுக்கு தகுதியான இடங்களை தேர்வு செய்து வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் சின்னாளபட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். உடன் திண்டுக்கல் ப.வேலுச்சாமி எம்.பி., ஒன்றியச் செயலாளர் முருகேசன், ஒன்றியப் பெருந்தலைவர் மகேஸ்வரி, பேரூராட்சி மன்றத் தலைவர் பிரதீபா, துணைத் தலைவர் ஆனந்தி, செயல் அலுவலர் செல்வராஜ் உட்பட பலர் உள்ளனர்.

கலைஞானி கமல்ஹாசன் முதல் பிரதியைப் பெற்று சிறப்புரை! இந்து என்.ராம் - மனோஜ்குமார் சொந்தாலியா - பாலசுப்பிரமணியன் ஆதித்தன் - எல்.ஆதிமூலம் வாழ்த்துரை!

"கலைஞர் 100 - விகடனும் கலைஞரும்" நூல்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு சிறப்புரை!

சென்னை, செப், 19-

"கலைஞர் 100 - விகடனும் கலைஞரும்" நூலினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு சிறப்புரை யாற்றுகிறார். இந்நூலின் முதல் பிரதியை கலைஞானி கமல்ஹாசன் பெற்றுக்கொண்டு சிறப்பு ரையாற்றுகிறார்.

விகடன் குழுமம் சார் பில், "கலைஞர் 100 - விகட னும் கலைஞரும்" நூல் வெளியீட்டு விழா நாளை (20.9.2023 - புதன்கிழமை) மாலை 5.30 மணியளவில் சென்னை - கலைவாணர் அரங்கத்தில் நடைபெறு கிறது.

இந்நூலினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு சிறப்புரை யாற்றுகிறார்.

நூலின் முதல் பிரதியை கலைஞானி கமல்ஹாசன் பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

விகடன் குழுமம் நிர் வாக இயக்குநர் பா.சீனி வாசன் வரவேற்புரை யாற்றுகிறார்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் 'தி இந்து' குழு மம் இயக்குநர் 'இந்து' என். ராம், 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' தலைவர் - நிர் வாக இயக்குநர் மனோஜ் குமார் சொந்தாலியா, 'தினத்தந்தி' இயக்குநர் பாலசுப்பிரமணியன் ஆதித் தன், 'தினமலர்' வர்த்தகம் - தொழில்நுட்பப் பிரிவு இயக்குநர் எல்.ஆதிமூலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

'ஆனந்த விகடன்' ஆசிரியர் தி.முருகன் நன்றி கூறுகிறார்.

பிரதமர் மோடி தொடங்கியுள்ள

விஸ்வகர்மா திட்டம் மோசமான நடவடிக்கை!

இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன் சாடல்!

நாகர்கோவில், செப். 19 -

விஸ்வகர்மா திட்டம் மோசமான நடவடிக்கை என்று முத்தரசன் தெரி வித்து உள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன் நேற்று முன்தினம் மாலை நாகர்கோவிலில் அளித்த பேட்டி வருமாறு : -

பிரதமர் மோடியின் பிறந்தநாளில் விஸ்வகர்மா திட்டத்தை தொடங்கியுள் ளார். 18 தொழில்களை கொண்டுள்ள இந்த விஸ்வ கர்மா திட்டத்திற்கு குடும்ப ரீதியில் மேம்படுத்த

அறிவிக்காமல், அவர்களது பிள்ளைகள் 18 வயது கடந்த பிறகு மேல் படிப் புக்கு செல்லாமல் அவர் களுக்கு தொழில் தொடங்க கடன் உதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

இது மோசமான நடவ டிக்கை. மோடி அறிவித் துள்ள இந்த திட்டத்தை திரும்ப பெற வேண்டும். மோடியும் பா.ஜ.வும் சனா தனத்தை பற்றி அதிகமாக பேசுகிறார்கள். 2014ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு எந்த வாக்குறுதியை யும் நிறைவேற்றாததால் சனாதனத்தை பற்றி பேசு கின்றனர். மக்களிடம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் பா.ஜ.க.வும் பிரதமர் மோடியும் சனாதனம் பெய ரில் தப்பிக்க முயற்சி செய்கி றார்கள். பிரதமர் மோடி தலைமையிலான ஆட் சியை ஆர்.எஸ்.எஸ். தான் நடத்தி வருகிறது. நாடாளு மன்ற திறப்பு விழாவின் போது குடியரசுத் தலைவர் புறக்கணிப்பட்டார். ஜி 20 மாநாட்டில் தேநீர் விருந் தின் போது எதிர்க்கட்சித் தலைவர் அழைக்கப்பட வில்லை. ஜனநாயகத்தை சாகடிக்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறி னார்.

டி.கே.எஸ்.இளங்கோவன் - நா.எழிலன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

நீலகிரி மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்கம்!

மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள்!

நீலகிரி, செப். 19 -

நீலகிரி மாவட்டக் கழ கச் செயலாளர் பா.மு.முபா ரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கள் கூட்டத்தில் எடுக்கப் பட்ட முடிவின்படி, முத்த மிழ் அறிஞர், சமூக நீதி காவலர், நம் இதய தலைவர் கலைஞர் அவர்களின் நூற் றாண்டு விழாவினை முன் னிட்டு, தலைவர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை சாதாரண சாமான்ய மக்க ளும், கழக நிர்வாகிகள், தொண்டர்களும் அறிந்தி டும் வகையில், கவியரங்கம், கருத்தரங்கம், பேச்சு போட் டிகள், கட்டுரை போட்டி கள், கவிதை போட்டிகள், விளையாட்டு போட்டிகள் மாரத்தான் ஓட்டங்கள் நடத்திடவும், மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், நலத்திட்ட உத விகள் வழங்குதல், ஆதவர வற்ற இல்லங்களில் உணவு வழங்குதல் போன்ற மக்கள் பயன்பெறும் நிகழ்ச்சிகள், ஒவ்வொரு மாவட்டத்தி லும் கழக கொடியேற்று விழாக்கள் போன்ற நிகழ்ச் சிகளை இந்த ஆண்டு முழு வதும் நடத்துவது என தீர் மானிக்கபட்டு கடந்த ஜூன் 3ம் தேதி முதல் மாவட்டத்தில் கழக கொடி யேற்று விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச் சிகள் தொடர்ந்து நடந்து வருகிறது, இதன் தொடர்ச் சியாக நீலகிரி மாவட்ட தி.மு.க., சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் நூற் றாண்டு விழா கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

அதன்படி, தலைமை கழ கத்தின் சார்பில் கழக கொள்கை பரப்பு செயலா ளரும், கழக மாநிலங்க ளவை குழு தலைவருமான திருச்சி.என்.சிவா. அறிவிப் பின்படி, நாளை (20.9.2023 புதன்கிழமை) சரியாக மதி யம் 2 மணியளவில் உதகை ஒய்.எம்.சி.ஏ. ஆனந்தகிரி கூட்ட அரங்கில் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்த ரங்கம் நடைபெற உள்ளது.

கருத்தரங்கத்தில் தலைமை கழகத்தின் சார்பில் பின்வ ரும் தலைப்புகளில் கழக முன்னணியினர் கருத்துரை யாற்ற உள்ளனர்.

முன்னாள் எம்.பி. டி.கே. எஸ்.இளங்கோவன், கலை ஞர் ஒரு கருவூலம் எனும் தலைப்பிலும், மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., கலைஞர் ஓர் அறிவாலயம் எனும்தலைப்பிலும், பெரு நற்கிள்ளி கலைஞர் ஓர் அறி வகம் எனும் தலைப்பிலும், ஈரோடு சத்தியவதி கலை ஞர் ஓர் அன்பகம் எனும் தலைப்பிலும், பொள்ளாச்சி சித்திக் கலைஞர் ஒரு நூலகம் எனும் தலைப்பி லும் உரையாற்றுகின்றனர்.

தமிழ்நாடு - சிங்கப்பூர் நட்புறவுக் கழகத்தின் சார்பில்

சிங்கப்பூர் தந்தை லீ குவான் யூ பிறந்த நாள் விழா!

சுப.வீரபாண்டியன் சிறப்புரை! தஞ்சை.கூத்தரசன் வரவேற்புரை!

சென்னை, செப். 19 -

தமிழ்நாடு - சிங்கப்பூர் நட்புறவுக் கழகத்தின் அமைப்பாளர் தஞ்சை.கூத் தரசன் தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

த மி ழ க த் தி லு ள் ள தஞ்சை, திருவாரூர், நாகப் பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங் களிலுள்ள பல நூற்றுக் கணக்கான கிராமங்களி லிருந்து நல்வாழ்வு தேடி சிங்கப்பூருக்கு சென்ற பல் லாயிரக்கணக்கான தமிழர் களை வரவேற்றுப் பணி களில் அமர்த்தி அரவ ணைத்த சிங்கப்பூரின் சிற்பி லீ - குவான் யூ அவர்களின் பிறந்த நாள் நன்றிப் பெரு விழா, 21.9.2023 வியாழக் கிழமை மாலை 5 மணியள வில், சென்னை - 4, ஆழ் வார் பேட்டை, சி.ஐ.டி. காலனி 2வது தெருவில் (டி. டி.கே. சாலையில் உள்ள ஓட்டல் இராஜ்பார்க் எதி ரில் உள்ள சாலை) அமைந் துள்ள கவிக்கோ அப்துல்ரகு மான் மன்றத்தில் நடை பெறவிருக்கிறது.

அவ்விழாவில், தஞ்சை. கூத்தரசன் வரவேற்புரை யாற்றுகிறார். கவிஞர் கா.முருகையன் தொகுப் புரை நிகழ்த்துகிறார்.

அரிமா முனைவர் நா. சந்திரபாபு தலைமை தாங்கு கிறார். அத்திப்பட்டு சாம்ராஜ் தகுதியுரை வாசிக்கிறார்.

சிங்கப்பூர் லீகுவான்-இயு படத்தினை திறந்து வைத் தும் வாழ்நாள் சாதனையா ளர் விருதுக்கான வெள்ளிக் கேடயத்தினை லெ.இர ஜினி காந்த் எம்.எல்.ஏ., அவர்களுக்கு வழங்கியும் சுப.வீரபாண்டியன் சிறப் புரை யாற்றுகிறார். தமிழ் நாடு சேம்பர் ஆப் காமர் சின்" தலைவர் சோழ நாச்சியார் இராசசேகர், மாம்பலம் ஆ.சந்திரசேகர், மன்னை.சோம.இளங்கோ வன், தேனாம்பேட்டை லயன்ஸ் கிளப் தலைவர் மெ.சண்முகம், தக்கோலம் தேவபாலன், சி.இராசே ந்தி ரன் ஆகியோர் வாழ்த்துரை யாற்றுகின்றனர்.

விழாவுக்கு அனைவரும் வருகை தர வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

திருத்தணி,அரக்கோணத்தை இணைக்கும் புற வழி சாலை பணிகள் தொடங்கப்பட்டு அதிமுக ஆட்சி காலத்தில் ஆமை வேகத்தில் பணிகள் நடைபெற்று வந்த நிலையில் திமுக ஆட்சி பொறுப்பேற்றதும் பணிகள் வேகமெடுத்தது.தற்போது சாலை இணைப்பு முழுவதும் முடிவடைந்த நிலையில் ரயில் தண் டவாளத்தை கடக்கும் பகுதி மட்டும் முடிக்கப்படாமல் உள்ளது.இது குறித்து பொதுமக்கள் ரயில்வே மேம்பாலப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று கோரிக்கை மனு அளித்ததை தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுடன் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம். எல்.ஏ.நேரில் சென்று பாலப் பணிகளை ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளிடம் பணிகள் விரைந்து முடிக்க அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது நெடுஞ்சாலைத்துறை உதவி இயக்குனர் அன்பரசு உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட கூற்றுச்சூழல் அணி சார்பில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவுறுத்தலின்படி கூற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சி. இளஞ்செழியன் ஏற்பாட்டில் 1000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை மாநில துணை செயலாளர் பழ.செல்வகுமார் ,மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் நாராயணன் தலைமையில் மாவட்ட அமைப்பாளர் பி.வெங்கடேசன், 19வது வட்ட செயலாளர் கா.தாமரைச்செல்வன் முன்னிலையில் அணியின் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி தொடங்கி வைத்தார்.இதில் மாவட்ட கூற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் டி.சுதர்சனம், வர்த்தகர் அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, முன்னாள் வட்ட செயலாளர் எஸ்.ஸ்டாலின், தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.உதயகுமார், தகவல்தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பா.கோபிநாத் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.